செ.வெ.எண்: 65 நாள்: 24.01.2020

**மாவட்ட அளவில் மாற்றுத்திறனாளிகளுக்கான தடகள விளையாட்டுப்போட்டிகள் நடைபெற உள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

மாவட்ட அளவில் மாற்றுத்திறனாளிகளுக்கான தடகள விளையாட்டுப்போட்டிகள் நடைபெற உள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

2019-2020- ஆம் ஆண்டுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், மாவட்ட அளவில் மாற்றுத் திறனாளிகளுக்கான தடகள விளையாட்டுப் போட்டிகள் ஆடவர் மற்றும் மகளிருக்கு 30.01.2020 அன்று காலை 9.00 மணி முதல் புதுக்கோட்டை மாமன்னர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடத்தப்படும் இந்த விளையாட்டுப் போட்டிகளில் கை, கால் ஊனமுற்றோருக்கான பிரிவில் 50மீ ஓட்டம் - கால் ஊனமுற்றோருக்கும், 100மீ ஓட்டம் - கை ஊனமுற்றோருக்கும், 50மீ ஓட்டம் - குள்ளமானோருக்கும், குண்டு எறிதல் - கால் ஊனமுற்றோருக்கும், 100மீ சக்கர நாற்காலி - இரு கால்களும் ஊனமுற்றோருக்கும் நடத்தப்படவுள்ளது.

பார்வையற்றோருக்கான பிரிவில் 50மீ ஓட்டம் - முற்றிலும் பார்வையற்றோருக்கும், 100மீ ஓட்டம் - மிக குறைந்த பார்வையற்றோருக்கும், நின்ற நிலையில் தாண்டுதல் - மிக குறைந்த பார்வையற்றோருக்கும், மென்மையான பந்து - மிக குறைந்த பார்வையற்றோருக்கும், குண்டு எறிதல் - முற்றிலும் பார்வையற்றோருக்கும் நடத்தப்படவுள்ளது.

மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான பிரிவில் 50மீ ஓட்டம் -ஐக்கு தன்மை முற்றிலும் இல்லாதவருக்கும், மென்மையான பந்து எறிதல் - ஐக்கு தன்மை முற்றிலும் இல்லாதவருக்கும், 100மீ ஓட்டம் - ஐக்கு தன்மை நல்ல நிலையில் இருப்பவருக்கும், நின்ற நிலையில் தாண்டுதல் - மூளை நரம்பு பாதிக்கப்பட்டவருக்கும், குண்டு எறிதல் - ஐக்கு தன்மை நல்ல நிலையில்

இருப்பவருக்கும் நடத்தப்படவுள்ளது. காது கேளாதோருக்கு 100மீ ஓட்டம், 200மீ ஓட்டம், நீளம் தாண்டுதல், குண்டு எறிதல் 400மீ ஓட்டம் ஆகிய போட்டிகளும் நடத்தப்பட உள்ளது.

போட்டிகளில் கலந்து கொள்பவர்களுக்கான விதிமுறைகளாக மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்பவர்களுக்கு வயது வரம்பு கிடையாது, மாவட்ட மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்பவர்களை அவர்கள் குறிப்பிட்ட பிரிவில் விளையாடுவதற்கு அக்குறிப்பிட்ட பிரிவைச் சார்ந்தவரா என உறுதி செய்வதற்காக அரசு வழங்கிய அல்லது சான்றினைஅவசியம் கொண்டு வருதல் வேண்டும்.

மாவட்ட மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் கண்டிப்பாக அரசு வழங்கிய அடையாள அட்டை அவசியம் கொண்டு வருதல் வேண்டும். குறிப்பிட்ட பிரிவில் விளையாட கலந்து கொள்பவர்கள் ஒருவர் ஒரு விளையாட்டில் மட்டுமே கலந்து கொள்ள வேண்டும். மாவட்ட அளவிலான விளைாட்டுப் போட்டிகள் நடத்தப்படும் போது மாற்றுத்திறனாளிகளுக்கு என செயல்படுத்தப்படும் பள்ளிகளுக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர்கள் மூலம தகவல் தெரிவிக்க வேண்டும்.

மேலும் இளம் விளையாட்டு விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை ஊக்கப்படுத்தும் வகையில் இவ்விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட வேண்டும். சக்கர நாற்காலி போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் சக்கர நாற்காலியுடன் கலந்து கொள்ள வேண்டும். போட்டிகளில் கலந்து கொள்ள விருப்பமுள்ள விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் உரிய ஆவணங்களுடன் 30.01.2020 அன்று காலை 8.30 மணிக்கு புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டரங்கத்தில் ஆஜராக வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**